Literacy for a Billion

Movie: Ramanaa
Year: 2002

Song: Vaana Villae
Lyricist: Palani Bharathi

வானவில்லே வானவில்லே
வந்ததென்ன இப்போது
அள்ளிவந்த வண்ணங்களை
எங்கள் நெஞ்சில் நீ தூவு
சின்ன பறவைகள்
கொஞ்சி பறக்குதே
பட்டு சிறகிலே
பனி தெளிக்குதே
அடி தாய் தென்றலே
வந்து நீ பாடு ஆராரோ...
வானவில்லே வானவில்லே
வந்ததென்ன இப்போது
எந்த நாட்டு
குயின் கூட்டமும்
பாடும் பாடல் கூ கூ
எந்த நாட்டு
கிளிகள் பேச்சிலும்
கொஞ்சும் மழலை உண்டு

ஜாதி என்ன கேட்டுவிட்டு
தென்றல் நம்மை தொடுமா
தேசம் எது பார்த்துவிட்டு
மண்ணில் மழை வருமா
உன்னோடு நானும்
எல்லோரும் ஓர் சொந்தம்
அன்புள்ள உள்ளத்திலே
வானவில்லே வானவில்லே
வந்ததென்ன இப்போது
அள்ளிவந்த வண்ணங்களை
எங்கள் நெஞ்சில் நீ தூவு
மேக மூட்டம்
கொஞ்சம் விலகவே
வண்ண நிலவு கண்டேன்
அன்பு பொழியும்
கருனை வெள்ளத்தில்
நெஞ்சம் மூழ்க நின்றேன்
உன்னை போலே
சிலர் இருந்தால்
மண்ணில் சொர்கம் வருமே
இயற்கை அன்னை
படைத்ததெல்லாம்
பொதுவினில் வருமே
மூங்கில் காடெல்லாம்
சங்கீதம் பாடாதோ
தென்றன் சொர்கத்திலே
வானவில்லே வானவில்லே
வந்ததென்ன இப்போது
அள்ளிவந்த வண்ணங்களை
எங்கள் நெஞ்சில் நீ தூவு

சின்ன பறவைகள்
கொஞ்சி பறக்குதே
பட்டு சிறகிலே
பனி தெளிக்குதே
அடி தாய் தென்றலே
வந்து நீ பாடு ஆராரோ...
வானவில்லே வானவில்லே
வந்ததென்ன இப்போது

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.